REGD. No. M. 6311 PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 281

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: சித்திரை 26உ சனி (8—5—54) ★ ★ ★ வெளியீடு: சித்திரை 27உ ஞாயிறு (9—5—54)

நேரு அமைக்கும் அரக்கு மாளிகை

—(★)—

திராவிடம் விடுதலைப் போர்க் கொடி உயர்த்தி விட்டது

நேருவின் துடுக்குப் பேச்சுக்குக் கண்டனம்

சேலம் மாநாட்டில் சம்பத் முழக்கம்

நாம் நமது திராவிடச் சமுதாயத்திற்கு ஒரு நல்வாழ்வு தேடித்தர, அதன் மானம் காப்பாற்றப்பட, அந்த சமுதாயத்தை கை விலங்கு மாட்டி அடிமையாக்கி வைத்திருக்கும் வடநாட்டு ஆதிபத்தியத்தை எதிர்த்து முறியடித்துத்தான் ஆகவேண்டும் என்னும் உறுதியான முடிவுக்கு வந்து போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நம்மை எல்லாம் தாறுமாறுகப் பேசுவதின் மூலம் தமிழ் நாட்டில் உள்ள சில சின்னவர்களை யெல்லாம் தன்னைக் காட்டிலும் பெரியவர்களாக்கி விட்டார் நேரு.

'விடுதலை! விடுதலை!' எனப் போர் முழக்கம் செய்யும் மக்களை, எந்தத் திமிரோடு வாய்க்கு வந்தபடி எல்லாம் ஏசுகிறாரோ பண்டிதர், அந்தத் திமிரின் பலனை வெகு சமீபத்திய எதிர்காலத்தில் அனுபவிக்கத்தான் போகிறார்.

பண்டிதருக்கு, இந்த நாட்டின் மெய்ம்மை நிலைகள் ஒத்துக்கொள்ளவில்லையோ என்னமோ என்று எனக்குத் தோன்றுகிறது. என்னைக் கேட்டால், தமிழ் நாட்டிற்கு பண்டிதரை வரவழைப்பவர்கள் இனி அவரை 'Air Conditions Box'ல் வைத்துக் கொண்டு வந்தால் இப்படி எல்லாம் நாக்குழறிப் பேசமாட்டார் என நம்புகிறேன்.

எது எப்படி இருந்தாலும் நாம் இந்தத் துடுக்குத்தனங்களை இனிமேல் அனுமதிக்கக் கூடாது! பழிசுமத்தும் இந்த நேரு துரை மகனுரின் துடுக்குத்தனங்களை நாம் ஒடுக்குவதை வைத்துத்தான் பிற நாட்டவர் நம்மை மதிப்பர்.

நமது விடுதலைப் பாதையை, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரைப் பற்றி புத்தகங்கள் எழுதத்தான் போகின்றனர், பிறநாட்டவர்! நமக்கெல்லாம் எப்போது தெரியும் மாசேதுங்கைப் பற்றி? எல்லாம் குறுகிய கடந்த காலத்தில் தானே!

இரண்டு ஆண்டுகட்கு முன்புவரை நம்மைப்பற்றி கேள்விப்பட்டபோதெல்லாம் அல்லது கற்பிக்கப்பட்ட போதெல்லாம் காதிலேயே விழாதவர் மாதிரி இருந்த பண்டிதர் கடந்த ஓராண்டு காலமாகத்தானே சென்ற விடமெல்லாம் நம்மைப் பற்றிப் பேசித்தான் ஆகவேண்டுமென்கிற நிலைக்கு வந்திருக்கிறார் கடந்த ஆண்டுவரை தெரியாது அந்த மேதாவிக்கு—'நாம், ஒரு விடுதலை இயக்கத்தினர்—என்பது!

தன்னை அடக்கி ஆள்பவனை, அடிமை கொண்டவனை எதிர்க்கும்போது எத்தகு கொடுமைகளையும், அடக்குமுறை அம்புகளையும் தூசி என மதிக்கும் அணிவு கொண்ட நாம், ஒரு நாட்டின் விடுதலை இயக்கம் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு விட்ட பிறகு, அத்தகு விடுதலை இயக்கங்களை அடக்கி ஒடுக்கிவிட மனப்பால் குடிக்கும் ஏகாதிபத்தியங்கள் கையாளும் பலவேறு போர்த் தந்திரங்களிலே முதலாவதான ஆணவப் பேச்சை, வசை புராணத்தை நல்ல இசை அமைப்புகளுடன் பாடத் தொடங்கியிருக்கிறார்.'

★

விடுதலைப் போரில் — சாவையும் சந்திப்போம்!

"சீர்கேடுகள் நிறைந்துள்ள நமது தாயகம் என்று வட நாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறதோ அன்றுதான் மக்கள் மக்களாய் வாழ்வர். அந்த விடுதலைக்கான போர் திட்டங்களை உடனடியாக நாம் வகுத்தாக வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். 'வாழ்வா சாவா என்ற அந்தப் போரிலே, நல்ல வாழ்வை நமது சமுதாயத்திற்குப் பெற்றுத்தர தோழர்கள் தங்களைத் தாங்களே சாவையும் சந்திக்கத் தயாராக்கிக்கொள்ள வேண்டும்."

—சேலம் மாநாட்டில் சம்பத்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஒருவருக்கு இருவர் இருந்தும்......

களம்பூர் தோழர்கள் கண்ட பலன் என்ன?

வன்னிய சமூகம் போன்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றம் ஏற்படவே நான் மந்திரியானேன் என்கிறார் கடலூர் ராமசாமியார்.

இதையேதான் இரண்டாண்டுக்கு முன்பு சொன்னார் மாணிக்க வேலர்.

இருவரும் வன்னியர் சமூகம். ஆனால் ஒருவருக்கு இருவர் மந்திரியாக இருந்தும், வன்னிய சமூகம் அடைந்துள்ள நன்மை என்ன?

நன்மை கூடக் கிடைக்கட்டும், அன்பம் ஏற்படும் போதாவது அதனைத் தடைக்கமுடிகிறதா, துரைத்தனத்தில் இடம் பிடித்துக் கொண்ட இவர்களால்!

வடாற்காடு ஜில்லாவில், களம்பூர் எனும் கிராமத்தில் உழவர் கிளர்ச்சி ஆறு திங்களுக்கு மேலாக நடைபெறுகிறது.

ஆணும், பெண்ணும் அவதிக்காளாக்கப்பட்டுள்ளனர்.

பலர்மீது வழக்குகள்!

பலர் சிறையில்!!

இவர்கள் அனைவரும் வன்னிய சமூகத்தினர்தான்!

மாணிக்கவேலருக்காக, தேர்தல் காலத்தில் உழைத்தவர்கள்.

ஒருவருக்கு இருவர் மந்திரிகளாக உள்ளனர், வன்னியர்கள்—களம்பூரில் அவதிப்படும் வன்னியகுல மக்களின் கண்ணீரைக் கண்டு மனம் இளகிற்று, உடல் பதறிற்று, சிறுவிரலை அசைத்தனரா—என்ன செய்தார்கள்?

என்ன செய்யப் போகிறார்கள்?

குலப்பேரைக் கூறிக் கொண்டு 'கனம்' ஆகிவிட்ட

(3 ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நான்கு முறை அனுமதித்தோம்—ஐந்தாவது முறை.........!

"புதிதாக திருட்டுத்தனமாய்ப் பிறந்து, வேகமாய் வளர்ந்து, நிரந்தரமாக நிலைத்துவிடக் கனவு கண்டு, திமிரோடு உலவுகிற வட இந்திய ஏகாதிபத்தியத்தின் அதிகார அர்ச்சனை — முதல் பாதுகாவலரான பண்டித நேரு, 'நாம் பூட்டி வைத்திருக்கும் ஏக இந்திய அடிமைச் சங்கிலியில் பிணைந்து கிடக்கும் இந்தத் தென்னாட்டவர், நமது அடிமைகள்' என்ற திமிரோடு இம்மாநிலத்திற்கு திக்விஜயம் செய்யும்போதெல்லாம், 'நாங்கள் அடிமைகளாய் வாழ மாட்டோம்! விலங்கொடிப்போம்! விடுதலைக்காக வீறுகொண்டெழுந்துவிட்டோம்', என்று போர் முழக்கமிடும் இந்த நாட்டு மக்களை—திராவிடர்களை தாறுமாறாகப் பேசிச் செல்கிறார்.

நேரு பண்டிதரின் பதட்டத்தை நாவடக்கமில்லாத, நாணயமற்ற துடுக்குத்தனத்தை திராவிடம் நான்கு முறைகள் அனுமதித்து விட்டது; இனியும் 5-வது முறை அனுமதிக்கப் போகிறதா?"

—சேலம் மாநாட்டில் சம்பத்.

ஓரினமாக இந்தியா என்று வாழ்ந்தது?

சந்தர்ப்பவாதிகளுக்கு சம்பத் எச்சரிக்கை

"கோடிக்கணக்கானவர்களின் விடுதலைக்காக உள்ள திராவிடர் இயக்கம் அர்த்தமற்றது என்ற வார்த்தையே என் வாயினுள் நுழையவில்லை, என்கிறார் நேரு! எப்படி நுழையும் அந்த வார்த்தை என்ன, பண்டிதரின் வாய்க்காகத் தயாரிக்கப்பட்டதா? ஒரு வார்த்தையையே உச்சரிக்க உன்னாலாகவில்லை! எப்படி ஆயிரம் சொல் செறிந்த செம்மொழி பேசும் மக்களையும் சேர்த்து நீ ஆள ஆசைப்படுகிறாய்! இந்தியா ஒரே நாடு என்கிறாய்!"

சரித்திர ரீதியாக; ஒரே தேசிய இனமாக உன்னுடைய இந்தியா என்று வாழ்ந்தது? அல்லது இப்போதாவது அப்படி வாழ்கிறதா? நாங்கள் மட்டுமா தனியாகக் கிளர்ச்சி நடத்துகிறோம்? நாகர்கள் என்ற மலை ஜாதியினர் தங்களுக்கெனத் தனி நாடு கோரிக்கை ஒன்றை வைத்துள்ளனர்; அதற்காகப் போராடியவண்ணமுள்ளனர்; எங்கே இருக்கிறது—இருக்க விரும்புகிறது இந்தியா ஒன்றாக?

விசித்திரவாதிகளிடையே வித்தியாசம் ஏது?

ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் மட்டுமின்றி, அகில இந்தியக் கட்சியினர் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர் யாரானாலும் சரி, அவர்கள் கம்யூனிஸ்டுகளானாலும், பிரஜா—சோஷியலிஸ்டுகள் ஆனாலும் சரி, காங்கிரசானாலும் சரி, அவர்கள் எல்லோருமே ஏகாதிபத்தியவாதிகள் என்று நான் சொல்லுகிறேன். இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திதான் தேசிய மொழி என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறதே! தமிழ் நாட்டில் உள்ள கம்யூனிஸ்டுகள் வேண்டுமானால், சந்தர்ப்பவாதத்திற்கு, இந்தி மொழி ஆதிக்கம் கூடாது என்று இலைமறை காய்மறைவாகப் பசப்புகிறார்களே தவிர, அவர்கள் ராஜ்யங்களுக்குள் பேசப்படும் மொழியாக இந்திதான் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்களே!

எவ்வளவுதான் முற்போக்குவாதியானாலும் அகில இந்தியா பேசுவதினால், இந்த நாட்டின் ஏகாதிபத்திய அரசுக் கட்டிலிலே, அஜாய் குமார்கோஷ் அமருவதா, கிருபளானி அமருவதா, அல்லது நேருவே இருப்பதா என்பதில்தானே, தவிர—இந்த நாட்டு மக்களின் மீது எந்த வடநாட்டான் சவாரி செய்வது என்பதிலேதானே தவிர—வேறெதிலே, நேருவுக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும், பிரஜா—சோஷலிஸ்டுகளுக்கும் வித்தியாசம்?

விபரீதமான செயல்!

நெய்வேலிச் சுரங்கத்திலே வடநாட்டானுக்கும், தென்னாட்டானுக்கும் கூலியில் வித்தியாசம் காட்டப்படுகிறது பகிரங்கமாக! இந்த அநீதி எந்த தைரியத்திலே—துணிவிலே இழைக்கப்படுகிறது? இதற்கு யார் பதில் சொல்லப் போகிறார்கள்?

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 8—5—54 சனி

பொருத்தமற்ற கூற்று!

இரண்டு தினங்களுக்கு முன், சென்னை சட்டசபையில், மொழிவழி மாநிலங்களைத் திருத்தி அமைப்பது குறித்து ஆராயப்பட்டு இருக்கிறது. சென்னை மாநிலத்தில் உள்ள மலையாளம் பேசும் பகுதிகளை, திரு-கொச்சியோடு, 1954 அக்டோபர் முதல் தேதிகுள் இணைக்கப்பட வேண்டுமென குடியரசு தலைவருக்கு சிபார்சு செய்யுமாறு, சென்னை அரசியலாருக்குச் சட்டசபை சிபார்சு செய்கிறது, என்ற ஒரு தீர்மானம் சென்னை சட்டசபையில் பொதுவுடைமை கட்சியினர் ஒருவரால் கொண்டுவரப்பட்டது. இதுதான் அசல் தீர்மானம். இதற்கு, இரண்டு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

திருவாங்கூர் - கொச்சியில் உள்ள தமிழ்ப் பகுதிகளை சென்னை மாநிலத்தோடு இணைத்துவிட வேண்டும் என்பது ஒரு திருத்தமாகும். பிரெஞ்சிந்தியப் பகுதிகளான புதுவை காரைக்காலை சென்னை மாநிலத்தோடும், மாஹியை திரு-கொச்சியோடும் இணைக்க முயல வேண்டுமென்பது இரண்டாவது திருத்தம்.

இரண்டு திருத்தத்தையும், காமராஜர் அமைச்சர் குழுவின் நாயகமாக இருக்கிற கனம் சுப்ரமணியம் ஒப்புக்கொண்டார். ஆனால், அசல் தீர்மானமான, சென்னை மாநிலத்தில் இப்பொழுது இருந்துவரும் மலையாளப் பகுதிகளைத், திரு-கொச்சியோடு இணைப்பது பற்றிய தீர்மானத்தை, அமைச்சர் குழு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது.

அசல் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்ததற்கு, அமைச்சர் சுப்ரமணியம் கூறிய காரணம், மறுத்ததைக் காட்டிலும் கேலிக்குரிய பொருந்தாக் கூற்றாக இருக்கிறது. மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாசல் அலி விசாரணைக் குழு, இப்பிரச்னைபற்றி ஆராய்ந்து வரும் பொழுது, அது குறித்து நாம் ஒரு முடிவு கூறுவது பொருத்தமாகாது எனக் காரணம் காட்டி, அசல் தீர்மானத்தை எதிர்த்திருக்கிறார் கனம். இது எவ்வளவு பொருத்தமானது என்பதைப் பார்ப்போம்.

நியமிக்கப்பட்டுள்ள பாசல் அலி குழு, பலதிறப்பட்டவர் சாட்சியங்களைப் பெற்று வருகிறது அவ்வாறு கிடைக்கும் சாட்சியங்களை எல்லாம் ஒன்றாகத் திரட்டி ஆராய்ந்துதான், குழு, பிரச்னையில் ஒரு முடிவு காண வேண்டும். இதுதான் நியாயமான முறை. இப்பொது முறையைத்தான் பாசல் அலி குழுவும் பின்பற்றியாக வேண்டும். மற்ற சாட்சியங்களுக்கு எதிராக, தங்களுடைய கருத்தை பாசல் அலி குழு முடிவெனக் கூறமானால், அது வெறும் எதேச்சாதிகாரமேயாகும்.

பாசல் அலி குழுவின் முடிவும், ஒரு சர்க்காரைக் கட்டுப்படுத்தும், நீதிமன்ற கட்டளை போன்றது அல்ல. யூனியன் சர்க்கார், அக்குழு முடிவை ஏற்றுக் கொண்டு, அதன்படி செயலாற்றினாலும் ஆற்றலாம்; அல்லது, ஒதுக்கித் தள்ளிவிட்டு, வேறு வகையை மேற்கொண்டாலும் மேற்கொள்ளலாம்; குழுவின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டாக வேண்டும் என்ற சட்டமோ யூனியன் சர்க்காருக்கு ஒரு துளியும் கிடையாது. பாசல் அலி குழுவின் ஆலோசனையை உதறித்தள்ளி தம் விருப்பம்போல் நடந்து கொள்ள, அக்குழுவை நியமித்த யூனியன் சர்க்காருக்குள்ள உரிமையை, முடிந்த அதிகாரத்தை, பாசல் குழுவிடம் யூனியன் சர்க்கார் அடகு வைத்துவிடவுமில்லை.

குழுவின் முடிவு மீது, நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் உரிமை இன்றும், எப்பொழுதும்போல், யூனியன் சர்க்காரிடம்தான் இருந்து வருகிறது; எனவே சென்னை மாநிலத்தோடு இணைந்திருக்கும் மலையாள மொழிப் பகுதிகளை, திரு-கொச்சியோடு இணைக்க வேண்டும் என்ற அசல் தீர்மானத்திற்கு எதிராக அமைச்சர் குழு இருந்துவிட்டதற்கு, கனம் சுப்ரமணியம் கூறிய சமாதானம் துளியும் பொருந்தவில்லை என்பது அம்பலமாகிறது.

சென்னை சர்க்காரும், மொழிவழி மாநில அமைப்புப் பிரச்னையில், தம் கருத்து என்ன என்பதையும், என்றைக்காவது ஒரு நாள் பாசல் அலி குழுவிடம் கூறித்தான் ஆக வேண்டும். வரும் நாட்களில் கூறவிருக்கும் கருத்தை சில நாள் முந்தியே சென்னை சர்க்கார் கூறிவிட்டதால், குடி முழுகிப்போகிறது ஒன்றுமில்லை. தனித்த முறையில் சர்க்கார் நேரடியாகக் கூறுவதற்கு பதில், சட்ட சபையில் ஏகோபித்த முடிவை ஒரு தீர்மானம்மூலம் நிறைவேற்றி வைப்பதினால், விசாரணைக் குழுவின் விசாரணைக்கு எந்த வகையிலும் தடையேற்படப்போவதும் கிடையாது.

பாசல் அலி குழுவிற்கு நெருக்கடி உண்டாக்கக் கூடாது என்பது அமைச்சர் குழுவின் அந்தரங்கசுத்தியான எண்ணமாக இருக்குமானால், மலையாள மொழி வழங்கும் பிரெஞ்சிந்தியப் பகுதியான மாஹியை திரு-கொச்சியோடு இணைக்க வேண்டும் என்ற திருத்தத் தீர்மானத்தையும் ஆதரிக்காமல் அசல் தீர்மானத்தை எதிர்த்தது போல, அமைச்சர் எதிர்த்துத் தோற்கடித்து இருக்கவேண்டும். ஆனால், அமைச்சரோ, மொழிவழியில் மாநிலங்களை அமைத்தாக வேண்டும் என்ற நியாய பலத்தை மனமார மீறமுடியாமல், மலையாள மொழி வழங்கும் மாஹி, மலையாள மொழி வழங்கும் திரு-கொச்சியோடு இணைய வேண்டும் என்ற திருத்தத்தை ஆதரித்து இருக்கிறார்.

மொழியை அடிப்படையாகக்கொண்டு ஒரு சிற்றூருக்கு நியாயம் கூறக் கிளம்பிய கனம், ஒரு பெரிய மாவட்ட விஷயத்தை முடிவு கட்டுவதில், அதே நியாயத்தை புகுத்திப் பார்க்க ஏன் ஒப்பவில்லையோ, நாம் அறியோம்!

அதுவுமல்லாமல், அசல் தீர்மானத்தை ஆதரிக்காததினால், ஐக்கிய கேரளம் அமைவதற்கு சென்னை சர்க்கார் தடையாக இருக்கிறது என எவரும் பொருள் கொள்ளக் கூடாது எனவும் கனம் சுப்ரமணியம் கேட்டுக்கொண்டு இருக்கிறார். இதே கருத்தையாவது, அமைச்சர் இறுதிவரையில் கடைப்பிடித்திருக்கிறாரா என்றால், அப்படியும் சொல்வதற்கில்லை.

திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகளை சென்னை மாநிலத்தில் சேர்க்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட மற்றொரு திருத்தத்தை அமைச்சர் ஒப்புக்கொண்டதினால், சென்னை மாநிலத்தோடு இன்று ஒன்றுபட்டுள்ள மலையாள மொழிப் பகுதி, மற்ற மலையாள நிலப்பரப்போடு ஒன்றுபட்டாக வேண்டும் என்பதை அமைச்சர், மறைமுகமாக வலியுறுத்தியதாகவே ஆகிறது.

சென்னை மாநிலத்தில் ஒட்டிக்கொண்டுள்ள மலையாள மொழிப் பகுதியினரை 'பிரிந்து செல்லுங்கள்' என முகத்திற்கு நேராகக் கூற, நெஞ்சுரம் இல்லாத காரணத்தாலோ என்னவோ, கனம், இந்த மறைமுகமான வழியைப் பின்பற்றியிருக்கிறார். ஆச்சாரியாரின் வாரிசான கனத்திற்கு புறக்கடை வழி விளக்கமாகத் தெரிந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை!

நாஞ்சில் நாட்டை சென்னை மாநிலத்தோடு இணைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்ததிலிருந்தே, மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற கொள்கை நியாயமானது என்பதை கனம் அமைச்சர் ஒப்புக்கொண்டவர் ஆகிறார். இந்த அடிப்படை நியாயத்தை ஒப்புக்கொண்டவர், 'தமிழ் மொழி வழங்கும் பெரும் பகுதி சென்னையோடு, ஒரு மாவட்டம் அளவு உள்ள மலையாளப் பகுதி இருக்க வேண்டும்' எனப் பிடிவாதம் பேசுவதற்கு எந்தவிதக் காரணமும் இருக்க முடியாது. அவ்வாறு ஏதாவது இருக்குமானால், அது நியாயமானதாக ஒருக்காலும் இருக்காது.

திருவாங்கூர் தமிழ்ப் பகுதியினர், சென்னை மாநிலத்தில் உள்ள தமிழ்ப் பகுதியோடு இணைய வேண்டுமெனத் துடியாய்த் துடிக்கிறார்கள். அண்மையில் நடைபெற்ற சட்டசபை தேர்தல், இதை உறுதிப்படுத்தியும் இருக்கிறது. நாஞ்சில் தமிழர்களின், இந்நியாயமான கோரிக்கையை திரு-கொச்சி சர்க்கார் ஒப்புக்கொள்ள மறுக்கிறது அல்லது காலங்கடத்துகிறது. கனம் சுப்ரமணியத்தின் கூற்று, நாஞ்சில் தமிழர்களின் கோரிக்கையை நிரந்தரமாக மறுப்பதற்கு நல்லதோர் ஆயுதமாக அமைந்துவிடாய் இருக்கிறது அதாவது மலபார் பகுதி மலையாளிகளைக் கொண்டுள்ள சென்னை மாநிலத்தோடு சேரத் துடிக்கிற நாஞ்சில் தமிழர்கள், அதே மலையாள மொழி பேசும் தங்களுடன் இணைந்திருப்பதில் தவறு என்ன என்று திரு-கொச்சி மலையாளிகள் கேட்கக் கிளம்பினால், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இப்பொழுதாவது மலையாள மொழி பேசும் ஒரு மொழியினரோடு மட்டுமே சேர்ந்திருக்கிறீர்கள். சென்னை மாநிலத்தோடு சேர்ந்தால், மலையாள மொழியினருடனும், கன்னட மொழியினருடனுமல்லவா நாஞ்சில் தமிழர்கள் சேர்ந்திருக்க வேண்டும் என திரு-கொச்சி மலையாள மொழியினர் கேட்டால், அதற்கு என்பதில் நாஞ்சில் தமிழர்கள் கூறுவர்?

சென்னை மாநிலத்தை, மொழி அடிப்படையில் திருத்தியமைத்து, தமிழ் நாடு என்ற பெயரிட்டு, நாஞ்சில் தமிழ்ப் பகுதிகளையும், ஒன்று சேர்க்க முற்படுவதுதான், கனத்துக்கு அழகு அதை விட்டுவிட்டு, மலையாளப் பகுதிகளை திரு-கொச்சியோடு ஒன்றாக இணைக்கும் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்து, தமிழர் பகுதிகளை மட்டும் ஒன்றாக இணைக்கும் திருத்தத்தை ஆதரித்திருப்பது கேலிக்கூத்தாகும். அதே நேரத்தில், மலையாள மொழி வழங்கும் மாஹியை, திரு-கொச்சியோடு சேர்க்க வேண்டுமென்பதை ஒப்புக்கொண்ட கனம், சென்னை மாநிலத்தில் உள்ள மலையாள மொழி வழங்கும் ஒரு மாவட்டத்தை திரு-கொச்சியோடு இணைக்க வேண்டுமென்ற அசல் தீர்மானத்தை ஒப்ப மறுத்ததும் நகைப்புக்கிடமானதாகும்.

தம்முடைய முரண்பட்ட இச்செயலுக்கு, கனம் சுப்ரமணியம் கூறும் ஒரே ஒரு காரணம், மாநிலத் திருத்தக் குழுவிற்கு நெருக்கடி உண்டாக்கக்கூடாது என்பதாகும். இது, வெறும் அபத்தம் என்பதை ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளோம்.

அமைச்சரின் குழப்பத்திற்கு வேறு காரணம் இருக்கிறது. அதாவது, மொழிவழி மாநில ஏற்பாட்டை, காங்கிரஸ் கட்சியினர், மற்றக் கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு வலியுறுத்தக் கூடாது என்ற, அகில இந்திய காங்கிரஸின் கட்டளைக்கு இணங்கி நடக்க வேண்டுமென்பதுதான் கனத்தின் விருப்பம். ஆனால், அக்கட்டளை நியாயமானது என்பதிலும் கனத்திற்கு நம்பிக்கை இல்லை; அதை வெளிப்படையாக மீறவும் அவருக்கு நெஞ்சுரம் இல்லை.

எனவே, தமது எதிர்ப்புக்குள்ள உண்மையான காரணத்தை வெளிப்படையாகக் கூறமுடியாததினால், பாசல் அலி குழுவின்மீது பழியைப் போட்டு, பொருந்தாக் காரணத்தைக் காட்டியுள்ளார் கனம் சுப்ரமணியம்!

விடுதலை வீரர்கள் வெற்றி!

பாரிஸ், மே 7—

இந்தோ-சீனாவில் பிரேஞ்சுக்காரர்கள் வசமுள்ள தீன்-பீன்-பு இருபது மணி நேரம் விடாமல் போர் நடந்ததை அடுத்து, வீழ்ச்சியடைந்தது என்று பிரேஞ்சு சட்டசபையில் பிரதம மந்திரி லேனியல் அறிவித்தார்.

முதல் மந்திரி லேனியல் இந்த அறிக்கையை வெளியிடுகையில், சபை உறுப்பினர்கள், தீன்-பீன்-பு வீரர்களுக்கு மரியாதை செய்யும் வகையிலும், வீழ்ச்சி குறித்து வருந்தும் வகையிலும் மௌனமாக எழுந்து நின்றனர். சட்டசபை நடவடிக்கைகள் ஒரு மணி நேரம் நிறுத்திவைக்கப்பட்டன.

இக்கோட்டை வீழ்ந்துவிட்டதால் ஜினிவாவில் பிரெஞ்சு தூதுக்குழுவின் மனப்பான்மை மாறிவிடாது என லேனியல் அறிவித்தார்.

வியட்மின் படைகளின் குவிந்த தாக்குதலை யடுத்து நடந்த போருக்குப் பிறகே அந்தக் கோட்டை அடிபணிந்தது.

இந்த இடத்தில் 57 தினங்களாக இடைவிடாமல் போர் நடந்தது.

இக்கோட்டையை காத்து நின்றவர்கள்மீது 4 மணி நேரம் பீரங்கிகளிலிருந்து விடுதலைப் படையினர் இடைவிடாது குண்டுகளை பொழிந்தவண்ணம் கோட்டையை பிடிப்பதற்கான இறுதித் தாக்குதலை ஆரம்பித்தனர். இக கோட்டையின் பலத்த கொத்தளங்கள் எல்லாம் வியட்மின் படைகளிடம் ஒன்றன்பின் ஒன்றாக வீழலாயின.

10,000 பிரெஞ்சு பாரா துருப்புகளுக்கும், அந்நியப் படைகளுக்கும், வியட்நாமியருக்கும் தீன்-பீன்-பு கோட்டை புகலிடமாயிருந்தது.

★

சுதந்திர உலகின் சின்னமாம்!

வாஷிங்டன், மே 7—

தீன்-பீன்-பு கோட்டையைக் காத்து வந்த துருப்புகளின் வீரத்தை ஜனாதிபதி ஐசன்ஹவர் குறிப்பிடுகையில், "சர்வாதிகார ஆக்கிரமிப்பை, எதிர்த்து நிற்கவும், சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கவும், மனிதன் மதிப்பைக் காக்கவும் அர்ப்பணித்துள்ள சுதந்திர உலகின் சின்னமே தீன்-பீன்-பு," என்றார்.

★

சர்ச்சில்- அட்லி மோதல்!

வாஷிங்டன், மே 6—

இந்தோ-சீனா பற்றி பிரிட்டன்—அமெரிக்காவுக்கும் உள்ள 'கருத்து வேற்றுமை' பற்றி சர்ச்சில் ஒரு அறிக்கை வெளியிட வேண்டுமென்று காமன்ஸ் சபையில் தொழிற் கட்சி உறுப்பினர் வற்புறுத்தியதற்கு, 'இப்படி விஷமம்செய்வதை உங்களிடமே வைத்துக் கொள்ளுங்கள்,' என்று சர்ச்சில் பதிலளித்தார்.

புதிய கல்வித் திட்டம்

எழுவர் கமிட்டி பரிசீலனை

சென்னை, மே 7—

இன்று மாலை செக்ரேட்ரியேட்டில் புதிய ஆரம்பக் கல்வி திட்டம் பற்றி பரிசீலனை செய்ய காங்கிரஸ் சட்ட சபைக் கட்சி நியமித்துள்ள எழுவர் கமிட்டி கல்வி மந்திரி தலைமையில் கூடியது.

ஷிப்டு முறையை கைவிட வேண்டுமெனவும், பள்ளி நேரத்திற்குப் பின் தொடுக்கப்படும் கைத்தொழில் பயிற்சி, தொழில் பயிற்சியாளர்களால் மேற்பார்வை செய்யப்படவேண்டுமென்றும் பொதுவாக அபிப்பிராயம் நிலவியதாகத் தெரிகிறது. கமிட்டிக் கூட்டம் மீண்டும் 10-ந் தேதி கூடும் எனத் தெரிகிறது.

இன்றைய கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்: ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, வி. கே. ராமசாமி முதலியார், டி. புருஷோத்தம், ஏ. சாம்பசிவம், டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, என் ராமசாமி நாயுடு.

மே 13-ந் தேதி நடைபெறும் காங்கிரஸ் சட்ட சபை கட்சிக் கூட்டத்தில் புதிய கல்வித் திட்டம் பற்றி விவாதம் நடைபெறும்.

சேலத்தில் தோழர் சம்பத் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் 5 ஆண்டுத் திட்டத்திலே தென்னாட்டவர் வெறும் 'பார்வையாளர்'களாக மட்டும் வைக்கப்பட்டுள்ளனர்

தட்டிப்பறிக்க வருகிறார்கள்

இப்போது வரிக் கமிஷன் ஒன்று வந்திருக்கிறது—இன்னும் நமது மடியில் என்ன இருக்கிறது—தட்டிப் பிடுங்கிக் கொண்டு செல்லலாம் எனப் பார்க்க!— ஆடு மந்தைக்குள் நுழைந்து எந்த ஆடு, சதைப் பற்றுள்ளது என்று பார்க்கும் கசாப்புக் கடைக்காரன்போல!

புகழ்மாலை—வெறும் பசப்பு வார்த்தை!

இங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள். நேருவை உலகமே புகழ்கிறதே, பார்த்தீர்களா?' என்றெல்லாம் தம்பட்டமடிக்கிறார்களே, அது ஏன் தெரியுமா? உள்நாட்டிலே தோன்றியுள்ள விடுதலை உணர்வை வெளிநாட்டான் தெரிந்து கொள்ளாமலிருக்க— நமது விடுதலை வேட்கையைக் குறைப்பதற்காக நமது கவனத்தை வேறு பக்கம் திருப்பச் செய்யப்படும் சதிதான்—அந்த 'உலகம் புகழ்கிறது நேருவை' என்ற வாசகங்கள் எல்லாம்!

ரோம் ஏகாதிபத்தியம் இப்படித்தான் தனது நாகரீகத்தையும் பண்பாட்டையும் கலையையும் காட்டியே நீண்டநாள் 'ஏகாதிபத்தியமாக'வே இருந்திடலாம் என முயற்சித்தது. அதே தந்திரத்தைத்தான் வடநாட்டவர் கையாளுகிறார்கள் என்பதை 'பண்டித நேருவின் புகழ் உலகில் வியாபிக்கிறது' என்ற பசப்பு வார்த்தைகள் நமக்குச் சொல்கின்றன.

என்ன இருக்கிறது இந்த வடநாட்டவரிடம் அதிகாரத்தைத் தவிர! நல்ல நாகரிகமும் கலையும் பண்பும் நம்மிடந்தானே உள்ளன! வேண்டுமானால், நம்மிடம் 'கும்பமேளா' இல்லை.

மண்டியிட்ட நிலையை மறக்க வேண்டாம்!

ஆகவே உலகத்தில் உள்ள ஏகாதிபத்தியங்கள் எல்லாம், உரிமைகோரும் மக்களின் முன் மண்டியிட்டு வருவதைக் கண்முன் கண்டுவரும் குட்டி ஏகாதிபத்தியவாதி பண்டிதர் உணர்ந்து நம்மைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டுமென்பதைச் சொல்கிறோம் அவர்களுக்கு!

தமிழ் நாட்டின் அரசியலிலே நாணயம் குறைந்து வருகிறதென்று நம் நண்பர்கள் குறை கூறினர். இராமசாமி படையாச்சி தான் வருகிறேன் என்று சொன்னாலும், காமராசர் ஏன் அவரைக் கூப்பிட்டார்? அவரைச் சேர்த்துக்கொண்டார்? இரண்டும் நாணயக் குறைவானதுதானே?"

ஏக இந்தியா — ஓர் ஏகாதிபத்திய மாளிகை!

சில நாட்களுக்கு முன், மக்கள் சபையில் பேசுகையில் இந்திய உள்நாட்டு மந்திரி கட்ஜு 'உத்திரப் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள் இந்தி மொழி கட்டாயமாக்கப்படக் கூடாதென்று பேசுவதைப் பார்த்தால், அவர்களுக்கு நாம் எத்தகைய ஒரு மாளிகையை எழுப்ப அஸ்திவாரம் போட்டிருக்கிறோம் என்பது தெரியவில்லைபோலும் என்றார். கட்ஜு எழுப்புவதாகச் சொல்கிற மாளிகை என்ன மாளிகை? ஏக இந்தியா என்ற ஏகாதிபத்திய மாளிகை என்பதைத் தவிர வேறென்ன?

அந்தக் கூட்டத்திலேயே, முன்னாள் உணவமைச்சராயிருந்தபோது, நம்மை எல்லாம், 'பருத்திக் கொட்டை சாப்பிடுங்கள்' என்று சொன்னாரே, அந்த முன்ஷியாரின் மனைவியார் லீலாவதி-முன்ஷியார் பேசியிருக்கிறார்கள்—"சரியோ, தவறோ! இன்னும் 10 ஆண்டுகளில் இந்தி கற்றுக் கொள்ளாதவர்கள், உத்தியோகங்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள்,"—என்னும் பொருள்படும்படி பேசியிருக்கிறார்கள்.

இன்னும் 10 ஆண்டுகளில் என்ன நடக்கும்—இந்த நாட்டில உள்ள சில சோற்றுத் துருத்திகளும் இது பற்றி எப்போதும்போல இருந்தால்? இந்தி கற்காதவருக்கு உத்தியோகம் தராத அரசாங்கம்! இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன? அவர்கள் பகிரங்கமாக நம்மைப் பார்த்துச் சொல்கிறார்கள்— "நான் ஏறி மிதிக்கிறேன்; நீ குனிந்து கொடு; இன்னும் நான் ஏறி மிதிக்கிறேன்; இன்னமும் நீ குனிந்து கொடு"—என்று!

குனிந்து கொடுத்துக் கொண்டே இருக்கப்போகிறோமா அல்லது, ஏறிமிதிக்கிறவர்களை வீழ்த்தப் போகிறோமா என்பதை நாடு எதிர்நோக்கி நிற்கிறது!'

இந்திய ஏகாதிபத்தியம்-ஒரு விளக்கம்

2—5—54ல்- சேலத்தில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் "ஏகாதிபத்தியங்கள்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுகையில் தொடர்ந்து பேசியதாவது:—

"சென்ற வருடத்திய மாநாடு கூட இந்த சேலத்திலே இயற்கையின் இன்னல்களுக்கிடையில் நடத்தப்பட வேண்டியிருந்ததைப் போன்றே இந்த ஆண்டும் அல்லற்பட வேண்டியதாய் விட்டது.

இந்த மாநாடு கூடும் நேரம் மிக மிக முக்கியமானது. இந்த மாநாட்டிலே என்னை, "ஏகாதிபத்தியங்கள்" என்ற தலைப்பில் பேசச் செய்திருக்கிறார்கள்.

ஏகாதிபத்தியங்கள், உலக மக்களால் ஆங்காங்கே வெகுவாக எதிர்த்துப் போராடி முறியடிக்கப்பட்டு வருகின்றன எனினும், அந்தப் பழைய ஏகாதிபத்தியங்கள் புதுப்புது பேருருக்கொண்டு வளர்வதை நாம் காண்கிறோம்.

திராவிடர்களாகிய நமது விடுதலையை பறித்துவைத்துக்கொண்டுள்ள வட இந்திய ஏகாதிபத்தியம் நம்மை அடிமைகளாய் உடைவிட்டிருக்கிறது. அந்த இந்திய ஏகாதிபத்தியத்திடம் இருந்துதான நாம் விடுதலை கோரி தீவிரமாகப் போர்புரிந்து வருகிறோம்.

ஏகாதிபத்தியங்கட்குப் பல இலக்கணங்கள் சொல்லப்படலாம்; ஆதிபத்தியங்கள் எல்லாம் ஆரம்பகால கட்டத்திலே வெறும் புகழையே விரும்பின. தங்களின் போர்த் திறனால், வலிமையினால், வல்லமையினால், பல நாட்டு அரசுகளை தன் காலடியிலே வைத்திருப்பதைப் பெருமையென, புகழ் என எண்ணினர்.

எவன் அதிகமான நிலப்பரப்பை, ஒரே குடையின் கீழ் வைத்திருக்கின்றானோ அவனை பெரிய 'வல்லரசு' எனப் பெயர் பெற்றான்.

பிறகு அடுத்த கட்டத்தில் தான் ஏகாதிபத்தியங்கள், 'பல வேறு நாடுகளை நம் காலடியில் அடிமைகளாய் வைத்திருந்தால் மட்டும் போதாது, அந்த நாட்டுச் சொத்துக்களும், செல்வங்களும் நமக்கும், நம் நாட்டு மக்களுக்கும் பயன்படவேண்டும், என்ற சுரண்டல் அடிப்படையை, நிர்மாணித்தன.

இந்த அடிப்படையிலே உருவானவைதான் பிரிட்டிஷ், பிரான்ஸ், ஸ்பானிஷ் முதலிய ஏகாதிபத்தியங்கள் எல்லாம்!

தாம் அடிமை கொள்கிற நாட்டின் உழைப்பைக்கொண்டு தன் நாட்டுச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும், தன் மக்களுக்கு சுகமான வாழ்வு தரவும் ஏகாதிபத்தியங்கள் முற்பட்டன.

முன்பு தோற்றுவிட்ட நாடுகள் எல்லாம் கப்பம் கட்டவேண்டும் எனஇருந்தது; கப்பம் கட்டுதல் என்றால், 2 பீங்கான் சாமான்களோ, 2 கம்பளிகளோ கூட அந்தக் கப்பம் இருக்கலாம்

பல வேறு உருவங்களில் வேகமாக வளர்ந்து, உலகின் பலப் பல பாகங்களிலே வேரூன்றியிருந்த ஏகாதிபத்தியங்கள் எல்லாம் இன்று, உலக மக்களின் அமைதியான நல்வாழ்விற்கு கேடு பயப்பன — மனிதனின் மனிதத் தன்மையை அழிப்பன என்று எல்லோரும் உணரத் தலைப்பட்டுள்ளனர்; உணர்ந்தது மட்டுமின்றி, அந்த ஏகாதிபத்திய அமைப்புகளைக் களைந்து, அடிமை நீங்கி மனித சமுதாயம் விடுதலை பெற்று வாழ வேண்டும் என்ற நல்லெண்ணமும், வளர்க்கப்பட்டுக் காரியங்கள் நடைபெறுகின்றதையும் நாம் காண்கிறோம்.

இன்று ஏகாதிபத்தியங்கள் எல்லாம் தங்களை ஏகாதிபத்தியங்கள் என்றே அழைத்துக்கொள்வதில்லை. காரணம், ஆதிபத்தியங்களும்கூடத்தான், ஏகாதிபத்தியம் என்பது ஒரு இழிவான வாசகம் என்பதை உணரத் தலைப்பட்டிருக்கின்றன. அதற்காகவே, தாங்கள் காலனி நாடுகளாக, அரைக் காலனி நாடுகளாக, வியாபாரச் சந்தைகளாக வைத்துள்ள நாடுகளைப் 'பாதுகாக்க'த்தான் அந்த நாடுகளின் மீது அரசோச்சுவதாகச் சொல்கின்றன. இன்றைய தினம், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்தியங்கள், பாதுகாப்பு அரசு என்ற பெயரிலே எண்ணற்ற நாடுகளை அவைகளின் சுதந்திரத்தை பலி கொள்வதை நாம் காண்கிறோம் ஆப்ரிக்கா, இந்தியா, தென் அமெரிக்கா, இந்தோ-சீனா இங்கெல்லாம் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி துரிதமாகப் பரவி வருவதையும் நாம் காண்கிறோம்.

யார் யாரோ சமாதானத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். உலக மக்களுக்கு சமாதானம் என்பது, இந்த ஏகாதிபத்தியங்கள் முழுமூச்சோடு, அவைகள் பிடி வைத்துள்ள நாட்டு மக்களால், எதிர்க்கப்பட்டு, முறியடிக்கப்பட்டாலன்றி, வெறும் வாய்ப் பேச்சாகத்தான் இருக்க முடியுமே அன்றி, சமாதானம் நடைமுறையில் பெற முடியாத ஒன்றாக இருக்கும்.

நாம் இந்த நாட்டிலே சமாதானத்தை விரும்புவதில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. மனித சமுதாயத்தின் சுதந்திரமான, பாதுகாப்புமிக்க, எதிர்கால அமைதியான வாழ்வுக்கு உலை வைக்கும், இந்த ஏகாதிபத்தியங்கள், ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலே நமக்கு, வேறு யாரைக் காட்டிலும் அதிகமான அக்கறை உண்டு. ஏனென்றால், நாமே நேரடியாக ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளை அதன் பிடியிலே மக்களின் வாழ்வு சூறையாடப்படும் வேதனையான துன்பத்தை அனுபவிப்பவர்களாயிருக்கிறோம்."

அறிக்கை

மாவட்டந்தோறும் நடைபெறும் தி. மு. கழக மாநாடுகளின் வரிசையில், இன்னும் செங்கற்பட்டு, வட ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி, நாஞ்சில் ஆகிய மாவட்டங்களின் மாநாடுகள் நடைபெறுமலிருக்கின்றன. இவ்வாண்டு ஆகஸ்டு திங்கள் இறுதிக்குள் மாவட்ட மாநாடுகள் அனைத்தும் நடந்தேறிவிடும் வகையில், அந்தந்த மாவட்டக் கிளைக் கழகங்கள் செயலாற்ற வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

விரைவில் மாவட்டக் குழுவைக் கூட்டி, மாநாட்டிற்கான அலுவல்களில் ஈடுபடும்படி மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அடுத்த மாநில மாநாடு, 1955 ஜனவரி திங்களுக்குள் நடைபெறக்கூடும் என்று பொதுச்செயலாளர் வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக்கொண்டு மாவட்டச் செயலாளர்கள் செயலாற்றத் தொடங்குவார்களாக!

தலைமை நிலையம், 8—5—1954

இரா. நெடுஞ்செழியன், துணைச்செயலாளர்—தி. மு. கழகம்

ஒருவருக்கு......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

னரே—அந்தக் குலத்தவருக்கு ஏற்படும் கொடுமைகளைக்கண்டு ஏன் கைகட்டியாய் பொத்தி இருக்கிறார்கள்.

மாதா மடிபிச்சை எடுக்கிறாள்; மகன் கோதானம் செய்கிறானும்!

கனம்பூரில் அன்னிய மக்களின் வாழ்வுக்காகப் போராடியவர்கள், சிறையில் வதைகிறார்கள்; அன்னியருக்கு நாங்கள் பெருமை தருகிறோம் என்று கூறிக்கொண்டு, ஒருவருக்கு இருவர் மந்திரியாகி விட்டனர்!

மந்த மதியினருக்கும், இக்தச் சூது புரியத்தானே செய்கிறது!!

—

நாசிக், மே 7—

28 வயதான சேத் மோதிலால் ஹிரா சந்த் என்ற லட்சாதிபதி தன் சொத்து எல்லாவற்றையும் துறந்து ஜைன சந்நியாசியாகிவிட்டார்.

எவ்வித வாகனமும் இன்றி நடந்து செல்வதாகவும், பிச்சை எடுத்து உண்பதாகவும் ஜைன பிரம்ம குருவிடம் பிரதிக்ஞை செய்து கொண்டாராம்.

சித்தூர் மாவட்ட தி. மு. க. மாநாடு

"சித்தூர் மாவட்ட தி. மு. க. மாநாடு நடத்துவதற்காக, போதட்டூர்பேட்டை தி. மு. க. செயலாளர் தோழர்கள் என். கே. எஸ். கணேசன், எ. தே. கு. இராமசாமி இருவரும், 5—5—54-ந் தேதி மாலை தி. மு. க. பொதுச்செயலாளர் அவர்களைக் காஞ்சியில் கண்டு பேசியதில், அண்ணாதுரை ஜூலை மாத மத்தியில் நடத்தலாமென ஆலோசனை கூறியுள்ளார். அதை ஒப்பிய தோழர்கள் இருவரும், மாநாட்டிற்கான வேலைகளை உடனடியாக மேற்கொள்ள உறுதி கொண்டுள்ளனர்.

நடக்க இருப்பவை

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்

8—5—54 மாலை 6 மணிக்கு, மணியக்கார சௌக்கி, பழைய ஆடு தொட்டி ரோடில் மேற்படி கழகத்தை தோழர் வி. பி. முருகையன் தலைமையில், தோழர் ப. ஜீவானந்தம், எம். எல். ஏ. துவக்கிவைப்பார். தோழர் சே. இராமலிங்கம், எம். சி. மற்றும் பலர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

9—5—54 காலை 10 மணிக்கு, தி. மு. கழக 2-வது வட்டத்தின் சார்பில், சென்னை, இராயபுரம், எண் 79, ப. வி. கோயில் தெருவிலுள்ள கழகக் கட்டடத்தில், 'மறுமலர்ச்சி நாவலர்கள்' என்பது பற்றி தோழர் சாமுவேல் தலைமையில் சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

ஆண்டு விழாவும் மாநாடும்

சென்னை பொது தொழிற்சாலை ஊழியர்கள் சங்கத்தின் 10-வது ஆண்டு விழாவும், மாநாடும் 9—5—54 மாலை 5 மணிக்கு, சென்னை, தங்கசாலை பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள பென்ஷனர்ஸ் லேன் மைதானத்தில் தோழர் கே. எஸ். ஷெட்டி தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. வி. ராமசாமி கொடியேற்று விழாவாற்றுவார்; எ. வி. குமார் விழாவைத் துவக்கி வைப்பார். தோழர்கள் மு. கருணாநிதி, என். மகாதேவன், பி. எம். சாமிராஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அழகிரி இலவச இரவு பள்ளி நிதிக்காக

9—5—54 காலை 10 மணிக்கு பெரம்பூர் லட்சுமி டாக்கீசில், தோழர் மு. கருணாநிதி தலைமையில், நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் முன்னிலையில் 'சிக்காகோ' தமிழ்ப் படம் திரையிடப்படும். கட்டணம்:—0-4-9; 0-7-6.

கழகத் தோழர்கள் கருத்தோவியம்

1—5—54 அன்று, சேலத்தில் நடைபெற்ற சேலம் மாவட்ட தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த மாநாட்டில், பல தலைப்புகளில், கழக வீரர்கள் ஆற்றிய விரிவுரைகளின் சாரம் கீழே தரப்பட்டுள்ளது:—

அ. பொன்னம்பலனார்

'மதமும் புராணமும்' என்ற தலைப்பில் பேசியதாவது:—

"ஆண்டவனை அடைவதற்கு வழி, மத நம்பிக்கை; அந்த மதக் கோட்பாடுகளை விளக்கு பவைதான் புராணங்கள். இந்த மதங்கள் இதுவரை மனித சமுதாயத்திற்குச் செய்த நன்மைகள்தான் என்ன? நன்மைகள்தான் செய்யாமற்போனாலும், தீமைகளையாவது செய்யாமலிருக்கின்றனவா என்றால், அவை செய்துள்ள தீமைகள் கணக்கிலடங்காதவை! மத பக்தியை வளர்க்கும் புராணங்கள் மக்களின் வாழ்க்கையிலே முன்னேற்றத்தையோ, இன்பத்தையோ, சாந்தியையோ தந்ததில்லை; மாறாக, மத போதையிலிருப்பவன் மதிமிழந்து மனிதனிடையே மாச்சரியத்தையும், குரோதத்தையும், விரோதத்தையும்தானே வளர்த்திருக்கின்றான்?

மதம், புராணம் என்பவை தான் என்ன?

நான்கு வகை வர்ணாச்சிரமத்தையும், அவற்றிடையே ஆயிரம் ஆயிரம் சாதிப் பாகுபாடுகளையும் உண்டுபண்ணி, உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற பேதத்தைக் கற்பித்து, 'இவையெல்லாம் ஆண்டவன் கட்டளை; நம்புங்கள்' என்று சொல்வதைத் தவிர வேறென்ன?

மத நம்பிக்கைகளும், புராண இதிகாசங்களும் மக்களுக்கு எதைத் தந்தது? மனிதனிடையே பொறாமையை, பொய் பேசுவதை, கொலை செய்வதை, கொள்ளையடிப்பதை ஒழித்தனவா என்றால் இல்லையென்பது தோழி, இந்தத் தீயச் செயல்களை எல்லாம் மாறாக பெரும் அளவிற்கு வளர்த்திருக்கின்றன.

மத எண்ணங்களை வளர்க்கத் தானே புராணங்கள் இருக்கின்றன? அந்தப் புராணங்களும், விநாயகர் அகவலும், சரசுவதி அந்தாதியும், திருமால் பதிகமும் மனிதனுக்கு நல்ல வாழ்க்கை நெறியையோ போதிக்கின்றனவா என்றால் இல்லையே?

ஆகவேதான், நாம், இந்த மத புராணங்களின் அடிப்படையையே எதிர்க்கிறோம்; தலைமுறை நியதோர் அடிப்படையில் எழுந்துள்ள மதமும், அவற்றைப் பரப்பும் புராணங்களும் மக்களின் வாழ்வுக்குப் பயன்படாமையால் தேவை இல்லை என்கிறோம்.

மதத்தின் பேரால், அவை போதிக்கும் ஆண்டவன் பெயரால், மக்களின் உழைப்பை ஒரு சிலர் சுரண்டிக் கொழுப்பதும், மக்கள் என்றென்றைக்கும், மத போதையில் மதிமிழந்து, மனிதனும் வாழாது—மனிதனை மனிதன் தாழ்ந்தவன், தீண்டப்படாதவன் என்று பேதம் பேசிக் கொண்டு வாழாமல், எல்லோரும் ஓர் குலம்—எல்லோரும் ஓர் இனம் என்ற நல்ல கொள்கையைப் பின்பற்றி வாழ வேண்டும் என்கிறோம்."

★

அரங்கண்ணல்

'இன்றைய தினம்' என்ற தலைப்பில் பேசியதாவது:—

"இன்றையதினம், உலகத் தொழிலாளர் எல்லாம் கொண்டாடும் திருநாள்; மே தினம்! இந்த இன்றையதினம் ஒரு சர்வதேச திருநாளாக இருப்பதற்குக் காரணம், தொழிலாளர்கள் விழிப்புற, தங்கள் உரிமைகளை நிலை நாட்டிக்கொள்ள, முதன் முதலாக தங்களைச் சுரண்டிக் கொழுப்பவர்களை, தங்கள் உழைப்பை உறிஞ்சுபவர்களை எதிர்த்து உரிமைக் குரல் எழுப்பிய நன்னாளின் நினைவாகக் கொண்டாடப்படுவதுதான் மே தினம்! அந்த நாளை, உழைப்பவரின் உரிமைக்காக, உதிரமும், உயிரும் பலி இடப்பட்ட தினமாக உள்ள நாளை, உலகெங்கணுமுள்ள தொழிலாளர்கள் கொண்டாடுவதில் வியப்பில்லை அல்லவா?

இன்று, மாஸ்கோவில் மாலங்கோவின் தலைமையில், செஞ்சதுக்கத்தில் மாபெரும் தொழிலாளர் அணிவகுப்பு நடைபெறும்; சீனாவிலே, மாசேதுங்கின் தலைமையிலே தொழிலாளர்கள் திரண்டிருப்பர்; விழாக் கொண்டாட அமெரிக்காவிலே, ஐசனோவர் அனுமதித்திருந்தால் அங்கும், இங்கிலாந்தில் சர்ச்சில் அனுமதித்திருந்தால் அங்கும் தொழிலாளர்கள் விழா கொண்டாடியிருப்பார்கள். இன்னும் உலகில் பலப்பல பாகங்களிலே இந்த மே நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டிருக்கும்.

திராவிடர்களாகிய நாம் இந்த நாட்டின் உழைப்பாளிகளான, பாட்டாளிகளான, விவசாயிகளான, சாதாரண மக்களான திராவிடர்களான நாம் இங்கு கூடியிருக்கிறோம்—இந்த மே தினத்தில்—மாநாட்டில், நமது விடுதலைக்கான வழிவகை காண; விடுதலைக் கோரிக்கையை வலியுறுத்த; அது பற்றி ஆலோசிக்க—இங்கே கூடியிருக்கிறோம். இந்த மே தினத்தில் நாம் எழுப்புகிற நியாயமான உரிமைக் குரல் நிச்சயம் வெற்றி பெற்றே தீரும்."

★

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,

"தொழிலாளரும் — சமுதாயமும்" என்ற தலைப்பில் பேசியதாவது:—

"'பகல் முழுதும் பாடுபடுகிறோம்—உடல் தேய உழைக்கிறோம்—என்றாலும், ஏன் என் வாழ்விலே வளம் இல்லை; வயிறாரக்கூட கஞ்சி கிடைப்பதில்லை; வறுமை வாட்டுகிறது,' என்று தொழிலாளர் எண்ணிப் பார்க்காமலில்லை; பார்க்கின்றனர், தாங்களே பதிலும் சொல்லிக் கொள்கின்றனர்—'படைத்தவன் நம் தலையிலே அப்படி எழுதி விட்டான்; பூர்வ ஜென்மத்திலே நாம் செய்த பாவங்களின் பலன் இன்று நாம் இப்படிக் கஷ்டப்படுகிறோம்; கதி கலங்கி நிற்கிறோம்; விதியை மாற்ற நம்மால் ஆகுமா? எல்லாம் என் தலையெழுத்து; என் செய்வது?'—என்று முடிவு கட்டுகின்றனர்.

தாங்கள் ஏன் வாழ முடியவில்லை—தாங்கள் உழைத்தும் சரியான ஊதியம் பெறுவதில்லை—என்பதற்கான உண்மைக் காரணங்களை அவர்கள் அறியாதவாறு மூடப் பழக்கங்களும், கடவுள் எண்ணங்களும் தடுத்துள்ளன. அந்த எண்ணங்கள் அவர்தம் உள்ளத்திருந்து எடுத்தெறியப்பட வேண்டும்.

'உழைப்பவர்க்கே உலகம்'—நமது உழைப்பை இன்னொருவன் ஏன் உழைக்காமலேயே உபயோகித்துக் கொள்ள வேண்டும்? நாம் உழைத்தும் ஏன் பயன் பெறாதபோக வேண்டும்?—என்பதை தொழிலாளர்கள் சிந்திக்க வேண்டும்.

ஆண்டவனல்ல — ஒருவன் உழைத்து ஓடாகவும், இன்னொருவன் உழைக்காமலேயே உண்டு கொழுக்கவுமான நிலையை உண்டுபண்ணியது—என்ற உண்மையை அவர்கள் உணர வேண்டும்.

நாம் வாழ முடியாததற்குக் காரணம், நாம் சுரண்டப்படுகிறோம்; நமது உதிரம் உறிஞ்சப்படுகிறது; அதுதான் உண்மை என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டு, 'எல்லோரும் உழைக்க வேண்டும்; உழைக்காது யாரும் வாழக்கூடாது; உழைத்ததினால் வரும் பயனை எல்லோரும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்!' என்கின்ற கொள்கையை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

'சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி, உழைப்பவருக்கே உலகம்,' என்னும் சீரிய லட்சியங்கள் அவர்களுக்கு உணர்த்தப்பட இம்மாநாடு துணை செய்யும்.

★

தில்லை—வில்லாளன்

"புதிய இலக்கியம்" என்ற தலைப்பில் பேசியதாவது:—

"நாட்டிலே மனிதனைப் பற்றி அவனது அன்றாட வாழ்வைப் பற்றி எழுத ஆரம்பித்தவர்களே நாம்தான்! வானுலகத்துத் தேவர்களையும், அந்த தேவர்களுக்கும் அதிபர்களான கடவுள்களைப் பற்றியும் எழுதப்படுபவை தான் இலக்கியங்கள் என்ற நிலையை நாம்தான் இந்த நாட்டிலே மாற்றி அமைத்தோம்!

சமீபத்தில் சிதம்பரத்தில் எழுத்தாளர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டிலே பண்டித நேருவும் கலந்து கொண்டிருக்கிறார். அந்த 'புதிய இலக்கியம்' படைக்கும் எழுத்தாளர் மாநாட்டிலே முதல் நாளன்று 'நந்தனார்' நாடகம் ஆங்கிலத்திலும், இரண்டாம் நாள் ருக்மணி அருண்டேல் நடனமும் எழுத்தாளர்களுக்கு பார்க்கத் தரப்பட்டவை. 'புதிய இலக்கியம்' படைப்பவரின் செய்கைகள் எப்படி இருக்கின்றன பார்த்தீர்களா?

இலக்கியம் என்பது ஒரு குறியை வைத்து எழுதுவது தான். அந்தக் குறிக்கோள், லட்சியம், மக்களுக்கு அவர்களின் வாழ்வுக்கு வழிகோலுவதாய் இருக்க வேண்டும். இலக்கியத்திலே, இன்று, மனிதன் தன்னைப்போல், மற்ற மனிதனைப் பற்றியே காண விரும்புகிறான். மனித வாழ்வை முன்னேற்றும் அடிப்படையில் எழுப்பப்படுகின்ற இலக்கியங்கள்தான் இன்று இந்த நாட்டிற்குத் தேவை அந்த முறையில் நாம் எழுதும் நாடகங்கள்தான், இன்று இந்த நாட்டு மக்களின் குறைகளை எடுத்துக்காட்டி, அந்தக் குறைகள் போக்கப்படுவதற்கான வழிவகைகளையும் மக்கட்கு எடுத்துச் சொல்கின்றன.

இலக்கியத்தைக் 'காலக் கண்ணாடி' என்றும் சொல்வார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திலே எழும்புகிற இலக்கியங்கள், அந்தக் காலத்து மக்களின் வாழ்வைப் பிரதிபலிப்பதாய் அமைந்தால்தான், அந்தக் காலத்திய மக்களின் வாழ்வும், கலையும், பண்பும், நாகரிகமும் பிற்காலத்தவரால் அறிந்துகொள்ளப்பட முடியும். அத்தகு இலக்கியங்கள்தான், காலக் கண்ணாடியாக விளங்கும்.

அந்தச் சிறந்த இலக்கியங்களை அமர இலக்கியங்களை இன்று இந்த நாட்டிலே நாம்தான் படைக்கிறோம் என்றால் அது மிகையாகாது."

மதுரை மாநாடுகள் ஒத்திவைப்பு

"மே மாதம், 15, 16 ஆகிய தேதிகளில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாடுகள், தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்றும், வெகுவிரைவில் மாநாடு நடைபெறும் தேதி அறிவிக்கப்படுமெனவும், மதுரை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் எம். அய்யாச்சாமி அறிவிக்கிறார்."

வெளிநாட்டில் செய்தித்தாள் படிப்போர் தொகை

இங்கிலாந்திற்கு முதலிடம்! பிரான்சிற்குக் கடைசி இடம்!

லண்டன், மே. 6—

ஒவ்வொரு நாட்டினுடையவும் மொத்த மக்கள் தொகைக்கேற்ப, சராசரி அதிக எண்ணிக்கையில், தினசரி செய்தித்தாள்களைப் படிப்போர் தொகை பிரிட்டனில்தான் கூடுதலாக இருந்து வருகிறது. 1000 த்திற்கு ஏறத்தாழ 611 நபர்கள் தினசரி நபர் ஒன்றுக்கு ஒரு பத்திரிகை வீதமும் வாங்கி படிக்கின்றனர்.

அடுத்து ஸ்வீடன் நாட்டில் 490 நபர்கள் தினப்படி பத்திரிகைகளை வாங்கிப் படிக்கின்றனர்; லட்சம்பர்க் நாட்டில் 447 பேர்களும், ஐஸ்லாந்தில் 439 நபர்களும் தினசரிப் பத்திரிகை படிக்கின்றனர்.

அமெரிக்காவில் 1000 க்கு 353 பேர்களும், பிரான்சில் 239 பேர்களும், பத்திரிகைப் படிக்கின்றனர்.

மொத்த உலக எண்ணிக்கை 1000 க்கு 88 தான் ஆகிறது.

1952-லது ஆண்டு பத்திரிகை படிப்போர் பற்றி, யூனெஸ்கோ அறிக்கை ஒன்று, இந்த விபரத்தைக் கூறியுள்ளது.

சினிமா, டெலிவிஷன், ரேடியோ ஆகிய பிரசார சாதனங்களின் செல்வாக்குப் பெருகி இருந்தாலும், தினசரி இதழ்களின் செல்வாக்கு இப்பொழுது மென்மேலும் வன்மைபெற்றிருக்கிறது எனவும், மக்களை இயக்குவிக்கும் அதன் ஆற்றலும் முன்னைக்காட்டிலும் அதிகமாகக் கூடி இருக்கிறது எனவும், அந்த அறிக்கை, மேலும் சுட்டிக்காட்டுகிறது.

சென்னை மாநிலத்தில் ஜேப்படி திருட்டு

மந்திரி தரும் புள்ளி விவரம்

சென்னை, மே. 6—

இப்பொழுதுள்ள சென்னை மாநிலத்தில் ஜேப்படி நடந்த விவரம் பற்றி சட்டசபையில் நிதி மந்திரி தெரிவித்ததாவது:—

1951-ல் ஜேப்படி செய்து பிடிக்கப்பட்ட வழக்குகள் 1434; தண்டிக்கப்பட்டவர்கள் 812; ஒரு தடவைக்கு மேல் தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டவர்கள் 219; 1952-ல் இதே அட்டவணைப்படி 1506; 773; 269; 1953-ல் 1546; 801; 290

அவர்கள் போக்கு!

கராச்சி, மே 6—

இந்தோ—சீனாவுக்கு பிரெஞ்சு துருப்புகளை ஏற்றிச் செல்லும் அமெரிக்க விமானங்கள் கராச்சியில் இறங்கவும், எண்ணெய் போட்டுக் கொள்ளவும் பாகிஸ்தான் சர்க்கார் அனுமதிக்கும் என்று தெரிகிறது.

* * *

இந்தோ — சீனாவில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படும் வகையில் கம்யூனிஸ்டுகளை எதிர்த்துப் போராடுவதற்காகக் கப்பல்களிலோ, விமானங்களிலோ அனுப்பப்படும் துருப்புகளை அனுமதிப்பதே இலங்கை சர்க்காரின் கொள்கை என அறிவிக்கப்படுகிறது.

பலே ஜோர்!

சென்னை, மே. 6—

கோடை காலத்தில் பிரயாணிகளுக்கு சௌகரியங்கள் செய்யும் பொருட்டு சென்னைக்கும்—பம்பாய்க்கும் இடையில் ரயிலில் வாரத்தில் 4 நாளைக்கு குளுகுளு செய்யப்பட்ட (ஏர் கண்டிஷன்) பெட்டிகள் இணைக்க ரயில்வே அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர்.

சகா மந்திரிகளை டிஸ்மிஸ் செய்ய...

முதல் மந்திரி கோரிக்கை

கராச்சி, மே 2—

சிந்து மந்திரி பீர்சாதா அப்துல் சத்தார் தனது மந்திரி சபையிலுள்ள மூன்று மந்திரிகளை 'டிஸ்மிஸ்' செய்யும்படி கவர்னரைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

இது தவிர முதன் மந்திரியும், எதிர்க்கட்சி மந்திரிகளும் தனித்தனியாக பாக். பிரதமரை சந்தித்துப் பேசினர்.

கூட்டுறவு சங்கங்களில் மோசடி!

மந்திரி தரும் எண்ணிக்கை

சென்னை, மே 6—

1953-ம் ஆண்டில் கூட்டுறவு சங்கங்களின் மோசடிகள் அதிகரித்துள்ளதாக சட்ட சபையில் மந்திரி பக்தவத்சலம் அறிவித்தார்.

பொய்க்கணக்கெழுதி மோசடிகள்: 1951, 52, 53-ம் ஆண்டுகளில் முறையே 2; 5; 21.

நம்பிக்கை மோசடிகள், 1951, 52, 53-ம் ஆண்டுகளில் முறையே 84; 94; 109;

மோசடிகள்:

1952, 53-ம் ஆண்டுகளில் முறையே 3; 8;

கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூ 10,96,00,000-க்கு மோசடி நடந்திருக்கிறதென்றும் கூறினார்.

சென்னைக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி

புதுடில்லி, மே 5—

"பிரிவினைக்கு முந்திய சென்னை மாநிலத்திற்கு 1953—54-ல் கடனாக 15 கோடி 68 லட்சம் ரூபாயும் மான்யமாக மொத்தம் 2 கோடி 20 லட்சம் ரூபாயும் அளிக்கப்பட்டது."—என்று இந்திய மேல் சபையில் அறிவிக்கப்பட்டது.

டல்லஸ் துணிவு!

வாஷிங்டன், மே. 5—

பிரிட்டன் ஒத்துழைக்காவிட்டாலும்கூட, தென்கிழக்கு ஆசியப் பாதுகாப்புக்கான தம் திட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு போக அமெரிக்க ராஜாங்க மந்திரி டல்லஸ் உத்தேசித்துள்ளாராம்.

இராசபாளையத்தில் மே தினக் கூட்டம்

இந்நகர் பாண்டியன் திடலில் 2—5—54 மாலை 5 மணிக்கு செயலாளர் பாலகிருஷ்ணன் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் வே. சௌந்திரராசன் மே தின வரலாறு பற்றி விரிவுரையாற்றினார்.

திராவிட முன்னேற்றக் கழகத் அங்கமாக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, லட்சுமி நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,